1975 ஏப்ரல் 7] [திரு. கே. என். குமாரசாமி]

கூடலூர் தாலுக்கா, சேரன்கோடு பகுதி, கொலப்புள்ளி என்ற இடத்தில் புது வாழ்வுத் திட்டத்தின் கீழ் 1,500 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படாமல் இருப்பதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவரவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக, 1,875 அகதிக் குடும்பங்களிலிருந்து 3,750 அகதிகளை குடியமர்த்துவதற்காக நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் 3,750 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கான திட்டம் காடுகள் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெருந்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவதை எதிர்நோக்கி, இத்திட்டத்தின் முதல் நிலையை, அதாவது 750 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை வளர்ப்பதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரையில், மொத்தம் 1,892 பேர் அடங்கிய 444 குடும்பங்கள் இத்தேயிலைத் தோட்டங்களில் அமர்த்தப் பட்டுள்ளனர். இக்குடும்பங்கள் அனைத்துக்கும் இலவச வீட்டு வசதி கொடுக்கப்பட்டுள்ளது. மேற்சொன்னவர்களில், 858 அகதித் தொழிலாளர்களுக்கு முறையான வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 91 அகதிகள் அரசுப் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். குடும்பம் ஒன்றுக்கு இரண்டு தொழிலாளர் வீதம் முறையான பணி அளிக்க வகை செய்வதே அரசின் நோக்கமாகும். ஆயினும் வேலை இருக்கும்போது, மற்றவர்களும் தாற்காலிகப் பணியாளர்களாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

அகதிகளுக்கு புதுவாழ்வு அளிப்பதற்கு எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி, அவரவர் குடும்ப அட்டைகளில் கண்டியிலுள்ள உதவி ஹை கமிஷனர் அலுவலகத்தில் உள்ள முதல் செயலாளரால் குறிப்பிடப்படுகிறது. வேலை காலியிடம் குறித்து திட்ட அதிகாரிகள் அனுப்பும் அறிக்கையின் அடிப்படையில் அகதிகள் வேலைக்காக மலைத்

தோட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். அகதிகள் வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு வேலே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஸ்ரீலங்கா அகதிகளின் புது வாழ்வுக்காகத் தொடங்கப்படும் மலேத் தோட்டங்களில் உள்ள வேலே வாய்ப்பின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்காவில் கண்டியிலிருந்த அகதிகள் அனுப்பப்படுவதால் மலேத் தோட்டங்களில் வந்து சேர்ந்த தொழிலாளர்களுக்கு வேலே வாய்ப்பு அளிக்கப்படவில்லே என்ற பிரச்சனேக்கே இடமில்லே. எனவே, நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், சேரங்கோடு வட்டாரத்தில் கோலப்பள்ளி என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா அகதிகள் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 1,500 அகதிகள் குடும்பங்களுக்கு வேலே வாய்ப்பு அளிக்கப்படவில்லே என்பதும் அவர்கள் அவதியுறுகின்றனர் என்பதும் சரியல்ல.

**திரு. கே. என். குமாரசாமி:** தலேவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது எல்லாம் சரியாக நடப்பதாகச் சொன்னுர்கள். 1,500 குடும்பங்கள் அங்கே இருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத்தான் வேலே கொடுக்கிருர்கள். ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் என்று சொல்வது ஒரு சில குடும்பங்களில் இருக்கலாம். ஆனல் எல்லா குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர் என்று இல்லே. அதே நேரத்தில் அவர்களுக்கு 3 ரூபாய்தான் கூலியாக கொடுக்கிருர்கள். ஆனல் 10 கிலோ தழை பறித்தால் 6 ரூபாய் கூலி அதே கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் பிரைவேட்டாக வேலே செய்கிறவர்களுக்கு கொடுக்கிருர்கள் 10 கிலோவிற்கு மேல் பறித்தால் கூடுதல் பணம் கொடுக்கிருர்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலேவர்:** விளக்கங்கள்தான் கேட்க வேண்டும். இப்படி பேசிக் கொண்டே போகக் கூடாது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலேவரவர்களே, ஆனல் இவர்களேப் பொறுத்தவரை இவர்கள் 20 கிலோ பறித்தாலும் 3 ரூபாய் கூலிதான் கொடுக்கிருர்கள். மற்றவர்களுக்குக் காட்டுகிற சலுகையை இவர்களுக்கு காட்டவில்லே. 3 ரூபாய் கூலி கொடுப்பதனுல் அவர்கள் எப்படி வாழ முடியும் என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்கு கட்டியிருக்கிற வீடு, அந்த டெம்பரரி